# அம்மாவைக் காணாமலேயே பிரிந்தது சாந்தனின் உயிர்!

## இலங்கையில் இறுதிக்கிரியை



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நிலையில் விடுவிக்கப்பட்ட – இலங்கை வருகை தந்து தனது தாயைப் பார்வையிடக் காத்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாந்தன் என்கின்ற சுதேந்திர ராஜா இன்று காலமானார்.

கல்லீரல் பாதிப்பு மற்றும் கால் வீக்கத்தால் சென்னை ராஜீவ் காந்தி அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், இன்று காலை மாரடைப்பால் உயிரிழந்தார்.

சாந்தன் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்–தாலும் இலங்கை வர முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் சிறப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டார். அதனைத் தொடர்ந்து இலங்கை வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டு மத்திய அரசுக்கு அதற்கான கோரிக்கைகள் அடங்கிய கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்நிலையில், திருச்சி மத்திய சிறை முகாமில் இருக்கும் சாந்தனை இலங்கைக்கு அனுப்ப மத்திய அரசு அனுமதி அளித்தது. இலங்கை அரசும் இதற்குரிய அனுமதியை வழங்கி, அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வந்தன. இந்நிலையிலேயே இன்று காலை மாரடைப்பு ஏற்பட்டு அவர் உயிரிழந்தார். அவரின் பூதவுடல் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 16 புதன்கிழமை 28.02.2024 கதிர் 191

# விமான சேவைத் தாமதங்களுக்கு நிதிப் பற்றாக்குறையே காரணம்!

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தலைவர்



விமானங்களின் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விமான தாமதத்திற்கு காரணமாக அமைந்துள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சேவையின் தலைவர் அசோக் பத்திரகே, நேற்று (27) தெரிவித்தார். கட்டுநாயக்க மார்க்பெட் வளா–கத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற செய்–தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், புதிதாக 7 விமானங்களை பெறுவ–தற்கு அரசாங்கத்திடம் கோரி–க்கைகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றைப் பெறுவதற்கு நிதிப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள–தாகவும் அவர் குறிப்பிட்டார். 'நேற்றைய தினம் 7 விமானங்கள் ரத்து செய்யப்பட்டனவா? ' என்று ஊடகவியலாளர்கள் கேட்டபோது, 'முழுமையாக விமானங்கள் ரத்து செய்யப்படவில்லை, விமான சேவையில் தாமதம் மட்டுமே ஏற்பட்டது,

இருப்பினும் மூன்று விமானங்கள் மட்டும் ரத்து செய்யப்பட்டன, அது குறித்து 2 ➤

## ராஜீவ் காந்தி முதல் ராஜீவ் காந்தி வரை

### சாந்தனைக் கொன்ற வேதனை!

, 4 ஆம் பக்கத்தில்

# பரீட்சைத் திணைக்களத்தின் ஊழியர்கள் நாளை முதல் தொழிற்சங்க நடவடிக்கை

## நீண்டகாலமாக கொடுப்பனவுகள் இல்லை!

பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஊழியர்களுக்கு வழங்கப் பட வேண்டிய பரீட்சை கொ டுப்பனவுகள் பல வருடங்களாக திணைக்களத்தின் நிதிப் பிரிவி னால் வழங்கப்படாமையால், நாளை (29) வியாழக்கிழமை முதல் மேற்படி ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு முதல் பரீட்சை திணைக்கள ஊழியர்க–ளின் பங்களிப்பில் சுமார் 200 வெவ்வேறு அரச பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை அவற்றிற்கான கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்படவில்லை என தெரி வித்துள்ள பரீட்சை திணைக்கள–த்தின் பரீட்சை ஊழியர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக நேற்று முன்தினம் (26) மதியம் 12 மணி முதல் 1 மணி வரை அடையாள ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டதாக திணைக்களத்–தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை ஊழியர்களுக்கு உரிய கொடுப்பனவுகளு–க்கான பணத்தை அரசா–ங்கம் வழங்கினாலும், குறித்த திணைக்களத்தின் நிதித்துறை உயர் அதிகாரிகள் இருவரின் தலையீட்டின் காரணமாகவே அந்த கொடுப்பனவுகள் முறை–றயாக வழங்கப்படுவதில்லை எனவும் அந்த அதிகாரி 2 ➤

# யாழில் நெடுந்தூர தனியார் பேருந்து சேவைகள் நிறுத்தம்!



யாழ்ப்பாணத்தில் உள்ளூர் தனியார் பேருந்து சேவைகள்வழமைபோன்று சேவையை முன்னெடு–த்து வருகின்ற நிலையில், நெடுந்தூர பேருந்து சேவைகள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன.

முறையான பேருந்துத் தரிப்பிடம் இல்லாததால் இன்றுமுதல் தனியார் போக்குவரத்து 2 ➤




# சாந்தனின் மரணத்திற்கு இந்திய இலங்கை அரசுகளும் தமிழ்த் தலைமைகளுமே பொறுப்பை ஏற்க வேண்டும்!

## குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் மு.கோமகன்

சாந்தனின் மரணத்திற்கு இந்–திய, இலங்கை அரசுகளும் தமிழ்த் தலைமைகளுமே பொறுப்பேற்க வேண்டும் என குரல் அற்றவர்க–ளின் குரல் அமைப்பின் ஒருங்கி ணைப்பாளர் மு.கோமகன் தெரி வித்துள்ளார். யாழ் ஊடக அமை–மயத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் 2 ➤

# அமைச்சர் ஹரீனின் பேச்சுக்கு எதிரான மகஜரை இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்க மறுத்தது!

## இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான பிரஜைகள் முன்னணி அதிருப்தி

இலங்கையானது இந்தியாவின் ஒரு பகுதி என அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்த அரச–யியலமைப்புக்கு முரணான கருத்தானது இலங்கை மக்களின் கருத்தல்ல என சுட்டிக்காட்டும் விதமாக மகஜர் ஒன்றை சமர்ப்பிப்பதற்காக இலஞ்சம், ஊழல் மற்றும் வீண் விரயத்திற்கு எதிரான பிரஜைகள் முன்னணியினர் இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு நேற்று (27ஆம் திகதி) சென்றபோது உயர்ஸ்தானிகர் காரியாலயம் அந்த மகஜரை ஏற்க மறுத்தது.

அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் தேசத்துரே–ாக மற்றும் அரசியலமைப்புக்கு முரணான அறிக்கை குறித்தும், இந்தியாவின் தேவைக்கேற்ப இலங்கையின் தேசிய வளங்கள், பொருளாதார மற்றும் பாதுகாப்பு கேந்திர இடங்கள் ஆகியனவற்றை விற்பனை செய்தல் உட்பட 'எட்கா' ஒப்பந்தம் குறித்தான 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## யாழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சேவைகள் இடம்பெறாது என வட இலங்கை

## சாந்தனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இவ்வாறு தெரிவித்துள்ளார். கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை நல்லிணக்க அடிப்படையில் ஒரே இரவில் பேச்சுவார்த்தை மூலம் விடுதலை செய்ய முடியும் என்றால் ஏன் சாந்தனை உடன் விடுதலை செய்ய முடியாமல் போனது? என மு.கோமகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தோடு இலங்கையில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார். (01)

## பரீட்சை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குறிப்பிட்டுள்ளார். பரீட்சை திணைக்களத்தில் சுமார் 650 பணியாளர்கள் உள்ளதாகவும், அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டால்நாளை வியாழக்கிழமை முதல் தொழிற்சங்க ரீதியாக நடவடிக்கை எடுக்க நேரிடுவதுடன் இதன் காரணமாக அறநெறிப் பரீட்சைகள் உட்பட இன்னும் பல பரீட்சைகள் பாதிக்கப்படும் நிலை தோன்றும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெப-65)

## விமான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பயணிகளுக்கு அறிவிக்கப்பட்டது' எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இவ்வாறு விமான சேவைகள்ரத்தாகியமை மற்றும் தாமதமாகியமை தொடர்பில் பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு வருத்தம் தெரிவிப்பதாக விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவனத்தின் தலைவரான பொறியியலாளர் அத்துல கல்கெட்டிய தெரிவித்தார். (ரெப-66)

## அம்மாவைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவரின் சொந்த ஊரில் இறுதிக்கிரியை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்துக்குத் தேர்தல் பிரசாரத்துக்காக 1991 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி வருகை தந்த ராஜீவ் காந்தி, ஸ்ரீபெரும்புதூரில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாந்தன் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டனர். விசாரணைக்குப் பின்னர் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

மரண தண்டனையை எதிர்த்து அவர்கள் மேல் முறையீடு செய்தனர். அதன் காரணமாக 1999 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி அவர்களுக்கு மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. பின்னர் உச்ச நீதிமன்றம் சாந்தன் உட்பட ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்தது.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் சி.சிவபரன் நேற்று ஊடகச் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து வேறு மாவட்டங்களுக்கு சேவையில் ஈடுபடும், அத்தோடு வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சேவையில் ஈடுபடும் தனியார் பேஷருந்துகள் தமது சேவையை முற்றாக இடைநிறுத்தியுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இருந்தாலும் உள்ளூர் தனியார் பேருந்துகள் வழமைபோன்று தமது சேவையை முன்னெடுத்திருந்தன. (01)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கை மக்களின் எதிர்ப்பை, அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையிலேயே மேற்படி மகஜரை இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்க சென்றதாக அந்த அமைப்பின் தலைவர் ஜாமுனி கமந்த துஷார தெரிவித்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு மகஜரை கையளிப்பதற்காக இந்த குழுவினர் சென்றபோது அப்பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெப-67)

## மனைவியை காக்க வந்த பொலிஸார் கணவனிடம் 'கடி'வாங்கிய கொடூரம்

சந்தேக நபர் ஒருவரை கைது செய்ய சென்ற போது குறித்த சந்தேக நபர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரின் கன்னம் மற்றும் கை விரல்களை கடித்த சம்பவமொன்று தங்காலையில் இடம்பெற்றுள்ளது. கடிக்கு ஆளாகிய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் தங்காலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த தங்காலை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மற்றுமொரு பொலிஸ் குழுவினரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சம்பவ தினத்தன்று குறித்த சந்தேக நபர் வீட்டில் தனது மனைவியை மண்டியிட வைத்து கொடுமைப்படுத்தி அவரை கடுமையான வார்த்தைகளால் சித்திரவதை செய்வதாக பொலிஸ் 119 பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் விசாரணை நடத்துவதற்காக அந்த வீட்டிற்குச் சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மனைவியை கொடூரமாக சித்ரவதை செய்யக் கூடாது என பொலிஸார் அவரை எச்சரித்த போதே, அவர் அந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் திட்டியதுடன் வன்முறையாகவும் நடந்து கொண்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சந்தேக நபர் ஒரு முன்னாள் இராணுவ வீரர் எனவும் தெரிய வருகின்றது. (ரெப-68)

## ரணில் களமிறங்குவதை உறுதிப்படுத்திய ஹரின்

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார். இதனை நான் உறுதியாகவே கூறுகின்றேன்." - என்று அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

"தேர்தல்கள் நடத்தப்படும் எனக் கூறப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக எதையும் இன்னும் கூறவில்லையே?" என ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- "ரணில் விக்கிரமசிங்க அரசியல் இராஜதந்திரம் தெரிந்தவர். பதற்றப்படமாட்டார். உரிய நேரத்துக்கு உரிய வகையில் வருவார். அது குறித்து எவரும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை. மே முதலாம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி பாரிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது. அப்போது பலர் எம்முடன் மேடையேறுவார்கள். இது அரசியலில் திருப்பமாக அமையும்." என்றார். (அ)

## பாக்கு நீரிணையை நீந்திக்கடக்கும் முயற்சி திருமலையில் இருந்து புறப்படும் தன்வந்



(ஹஸ்பர் ஏ.எச்)

இந்தியாவிலிருந்து தலை மன்னார் வரையான தூரத்தை 10 மணி நேரத்தினுள் நீந்திக் கடக்கும் முயற்சி தொடர்பில் தெளிவு படுத்தும் செய்தியாளர் சந்திப்பு இன்று காலை திருகோணமலை ஊடக இல்லத்தில் இடம்பெற்றது.

இதில் கருத்து வெளியிட்ட ஹரிஹரன் தன்வந், மார்ச் மாதம் முதலாம் திகதி இந்தியாவின் தனுஷ் கோடியில் இருந்து அதிகாலை 12.05 மணிக்கு நீச்சலை ஆரம்பித்து, மதியம் தலைமன்னார் பியர் என்ற இடத்தில் நீச்சலை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்தார்.

நீச்சலில் பாக்கு நீரிணையை கடந்து, இளைஞர்கள் மட்டத்தில் அதிகரித்துவரும் போதைவஸ்து பாவனையில் இருந்து மீள்வது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் வகையில் இந்த நீச்சல் முயற்சி காணப்படுகிறது.

கடற்பரப்பில் வெற்று பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களை அகற்றி, கடற்பரப்பினை சுத்தமாக வைத்திருத்தல், விழிப்புணர்வினை ஏற்படுத்தல், ஆமை முதலான கடல்வாழ் உயிரினங்களை பாதுகாத்தல், முருகைக் கற் பாறைகளின் முக்கியத்துவத்தை பேணுதல் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் வகையில் இந்த நீச்சலில் ஈடுபடவுள்ளேன்.

நான் திருகோணமலை ஈ.கி.ச. இந்து கல்லூரியில் எட்டாம் தரத்தில் கல்வி கற்று வருகிறேன். கடந்த நான்கு வருடங்களாக நீச்சல் பயிற்சி பெற்று வருகிறேன், என்றார் அவர்.

## கோணேசரின் ஊர்வலத்துக்கான கேடகம் தயார் நிலையில்



(ஹஸ்பர் ஏ.எச்)

சிவராத்திரியை முன்னிட்டு திருகோணேஸ்வரரின் ஊர்வலம் இடம் பெறவுள்ள நிலையில் ஊர்வலத்துக்காக பயன்படுத்தப்படும் கேடகம் உடைந்து பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்ய 15 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கேடகம் பயன்படுத்தப்படும் என திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்க தலைவர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

கனடாவில் உள்ள திருகோணமலை நலன்புரி சங்கம் இதற்கான நிதி உதவிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். திருக்கோணேஸ்வர ஆலயத்துக்கு சென்ற அவர் குறித்த நிதியினை உரியவரிடம் கையளித்ததன் பின்பே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி சிவராத்திரியை முன்னிட்டு ஊர்வலம் இடம்பெறும் எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.




# லஞ்சம் வாங்கிய 73 அரச அதிகாரிகள் கைதாகியுள்ளனர்! இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரி தெரிவிப்பு

2023 ஆம் ஆண்டில் லஞ்சம் வாங்கிய 73 அரசு அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அரச சேவைகளில் பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கு லஞ்சம் கேட்பதாக ஆணைக்குழுவுக்கு கிடைத்த புகார்கள் தொடர்பாக நடத்தப்பட்ட சோதனைகளின்போதே இந்த அதிகாரிகள் சிக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அரச அதிகாரிகளில் பொலிஸ்துறை அதிகாரிகளே அதிகம் எனவும், அந்த எண்ணிக்கை 16 எனவும், இதற்கு மேலதிகமாக பாடசாலை அதிபர் ஒருவரும், குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் ஐந்து பேரும், இலங்கை போக்குவரத்து சபையின் நான்கு பேரும் அடங்குவதாக தெரிவித்ததுடன் இதர துறைகளையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக 73 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த வருடம் (2023) மாத்திரம் லஞ்சம், ஊழல், சொத்துக்கள் தொடர்பாக 3432 புகார்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெப-62)

# நட்சத்திர தரத்திலான ஹோட்டல்களில் பணிக்கு ஆளில்லாமல் ஹோட்டல் நிர்வாகங்கள் சிரமங்களுக்கு ஆளாகியுள்ளனவாம்!

## பயிற்சி பெற்றவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதே காரணமாம்

இலங்கையிலுள்ள நட்சத்திர தரத்திலான சொகுசு ஹோட்டல்களில் பணியாளர் வெற்றிடங்கள் அதிகரித்திருப்பதன் காரணமாக சுற்றுலாப் பயணிகளுக்கு உணவு, பானங்கள் உள்ளிட்ட சரியான சேவைகளை வழங்குவதில் ஹோட்டல் நிர்வாகம் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

முகாமைத்துவ சேவை தொடக்கம் சமையலறை வரை அனைத்துப் பிரிவுகளிலும் பணியாளர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், தகுதியான பணியாளர்கள் விண்ணப்பிக்காத காரணத்தினால் இந்தப் பணியிடங்களை நிரப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த ஹோட்டல்களின் நிர்வாகத்தினர் முதலீட்டுச் சபைக்கு அறிவித்துள்ளனர்.

நட்சத்திர ஹோட்டல்களில் தொழில் புரிந்து பயிற்சி பெற்ற பலர் வெளிநாட்டு ஹோட்டல்களில் தொழில் வாய்ப்பை பெற்று வெளியேறுவதாலும், ஹோட்டல் சேவை தொடர்பிலான பயிற்சி கல்லூரிகளில் பயிற்சி பெற்ற பலர் வெளிநாட்டு ஹோட்டல்களில் வேலை வாய்ப்பை எதிர்பார்த்திருப்பதாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இதற்கு தீர்வாக ஹோட்டல் சேவையில் பயிற்சி பெற்ற இளைஞர்களை விரைவில் நட்சத்திர ஹோட்டல்களில் பணிக்கமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என முதலீட்டுச் சபையின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரெப-63)

# சஜித்தின் கட்சியுடன் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டுள்ளார் சம்பிக்க

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியுடனான தீவிர அரசியல் நடவடிக்கைகளிலிருந்து அண்மைக் காலமாக விலகியிருக்கின்ற அக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தி கட்சியுடன் விசேட அரசியல் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளார்.

இதுகுறித்து சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தி கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், ஐ.ம.ச. கட்சியும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். மேற்படி கலந்துரையாடல் விரைவில் இடம்பெறும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இவ்வாறானதொரு அரசியல் கலந்துரையாடலுக்கு கோரிக்கை விடுத்ததாக சம்பிக்க ரணவக்கவின் கட்சியின் பேச்சாளரும் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரெப-64)






# மிதி வெடி




*நேற்றுப் பின்னேரம் இருந்தாப் போல எனக்கொரு கோல்.... கன நாளைக்குப் பிறகு கம்பசில வேலை செய்யுற ஒரு தம்பி.... அங்க இங்க எண்டு கொஞ்சம் அரசாங்கத் தரப்பு அரசியல்வாதியளோடையும் தொடர்புள்ளவர்....*

*"அண்ணை .. எப்பிடி இருக்கிறியள்?" விசாரிப்பு பலமா இருந்துச்சு.... மனிசி பிள்ளையளில இருந்து பேரப் பிள்ளையள் வரை எல்லாரையும் குசலம் விசாரிச்சவர்... திடீரெண்டு கேட்டார்.... "அண்ணை.. பேப்பர் அது, இதெண்டு இவ்வளவு அறிவுள்ள நீ.. ஏனண்ணை ஒரு பட்டமும் எடுக்காமல் விட்ட நீ?" எனக்கும் என்னவோ தம்பிக்குத் திடீரெண்டு இவ்வளவு அக்கறை எங்க இருந்து வந்ததெண்டு ஒரு சந்தேகம் தான்... எண்டாலும்.. நானும் விடேல்ல....*

*"என்ன தம்பி விசர்க் கதை பறையுறாய்.... மடைழக்குக் கூடப் பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்காத நான் எப்பிடியடாப்பா பட்டம் எடுக்கிறது? லேசுப் பட்ட அலுவலே.... என்ர மூத்தது ஒரு மாதிரிப் பட்டம் எடுத்துப் போட்டுது... இளையது இண்டைக்கு வரைக்கும் ஒரு பாடம் "பாஸ்" பண்ண ஏலாமல் நிக்குது. இன்னும் முடிக்கேல்ல... யாரோ கவுளுவார் அவையளைப் பற்றிப் பேப்பரில போட்டதுக்காக "பேப்பர்காரன்"ர மகன் இவன் தான் எண்டு அந்த அம்மணி என்ர பொடி "டிகிறி" முடிக்க முடியாமல் செய்து வைச்சிருக்கு... தொடர்ச்சியா அஞ்சாவது வருசமும் கையில குடுத்துட்டாங்கள்....*

*இந்தச் சீத்துவத்தில "எஸ்.எஸ். சி" யே "பாஸ்" பண்ணாத எனக்கு பட்டம் ஒரு கேடோ?...*

*அண்ணை சும்மா விசர் கதை கதையாத... உனக்குப் பட்டம் நான் வாங்கித் தாறன்... படிப்பாவது... பணியாரமாவது.... வெளிநாட்டில நிக்கிற உன்ர மூண்டாவதிட்ட கொஞ்சக் காசு வாங்கித் தா... நான் உனக்குப் பட்டம் தாறன்...!*

*"என்ன தம்பி சொல்லுறாய்..? கட்டையில போற வயசில எனக்கெதுக்கடா பட்டம்? காசு வேணுமெண்டா வாங்கித் தாறன் உவன் இளையவனைப் "பாஸ்" பண்ணப்பண்ணி, உங்கட ஆக்களிட்டைப் பட்டத்தை வாங்கிக் குடு... அவனை ஒரு அரசாங்க வேலையில சேர்க்க உதவியா இருக்கும்... " எண்டன்!*

*அண்ணை உது அந்தப் பட்டம் இல்ல.... இது அதைவிடப் பெரிசு.... க(ல்)லாநிதிப் பட்டமண்ண... கல்லாமலே நிதி இருந்தா பட்டம் கிடைக்கும்!!*

*"என்னடா சொல்லுறாய்? கலாநிதிப் பட்டமோ? " எனக்கு மயக்கம் வராத குறை பாருங்கோ....*

*நான் படிக்காத ஆள் எண்டாலும், பத்திரிகையோடயே வளர்ந்ததால பட்டறிவு நிறையவே இருக்குது பாருங்கோ.... பல்கலைக்கழக நடைமுறைகள் பற்றி நிறைய வாசிச்சிருக்கிறன்அறிஞ்சு வைச்சிருக்கிறன்.*

*சாதாரணமாக ஒரு கற்றறிந்தவர் தன்ர அடிப்படைப் பட்டத்தை முடிச்ச பிறகு, பட்டப் பின் படிப்பு "டிகிறி", டிப்ளோமா எண்டு முடிச்சு அதுக்குப்பிறகு முதுமாணி முடிக்க முக்கால் வாசி வாழ்க்கை கடந்துடும்.... நரை, திரை தட்டி... தள்ளாத வயசில ஆராய்ச்சி செய்து... அறிக்கை சமர்ப்பிச்சு "பி.எச்.டி" வாங்கிப் பெயருக்கு முன்னால ஒரு "டீஆர்" போடுறதுக்குள்ள எல்லாம் முடிஞ்சிடும்...*

*இப்பிடி ஒவ்வொருத்தனும் கஸ்ரப்பட்டு, அடி தடிப்பட்டு - குத்துவெட்டு, குழி பறிப்புக்கு மத்தியில தான் கலாநிதிப் பட்டம் எடுக்கிறவை... அப்பிடி எடுக்கி றவையும் கலாநிதி தான்.... காசு குடுத்துப் பட்டம் வாங்கிறவையும் க(ல்)லாநிதி தான் எண்டாப் பாருங்கோவன்.... படிப்புக்கும், உழைப்புக்கும் அஞ்சு சதந்தன்னும் மதிப்பில்லாத நாடு பாருங்கோ.*

*இதில வேடிக்கை என்னவெண்டா... என்னட்டக் கேட்டதைப் போல அந்தத் தம்பி கேக்கிற ஆக்கள் எல்லாருக்கும் தம்பி வேலை செய்யிற இடம் பட்டம் குடுத்தா, அதுக்குச் சட்ட வலு இருக்கும் எண்டு நினைக்கினம். ஆனால், தம்பி பட்டம் வாங்கிக் குடுக்கிறது குவலயம் எண்ட "உல்டா" பல்கலைக்கழகத்தில இருந்து தான். தேடிப்பார்த்தால் உலகப் பல்கலைக்கழகங்களின் பட்டியலில அப்பிடி ஒண்டு இருக்கிறதாவே இல்லை!*

*இதுக்குள்ள யாழ்ப்பாணத்துக்கு வந்து இவையளிட்ட வேண்டின காசிலயே இவையளுக்கு நல்ல சாப்பாடு, "தண்ணி"யோட "ஹொட்டேல்" ஒண்டில விருந்தும் வைச்சு, வீறாப்பாப் படமும் எடுத்து பட்டம் குடுப்பினம். பட்டம் குடுத்ததுக்கு உள்ளூர் அரசியல் வா(வியா)தியும் சாட்சியா நிண்டு "போஃஸ்" குடுப்பார். மறுநாள் பத்திரிகைகளிலும், "பேஸ்புக்"லயும் படத்தோட வாழ்த்து வேற. எல்லாம் வியாபார உக்தி பாருங்கோ. பத்திரிகையில படத்தப் பாத்து பட்டத்துக்குக் காசு கட்டினவை கனபேர்.. அடுத்த மாசம் அவையளுக்கும் "கொண்வக்கேச"னாம்..!*

*இங்கத்த கம்பசிலயும் அடுத்த கிழமை "கொண்வக்கேசன்" தானே? விசியம் தெரியாத எங்கட வினாசி, கம்பஸ் காரனிட்ட காசு கட்டினதால தனக்கும் பட்டம் தரப் போகினமெண்டு சொல்லித் திரியுது.*

*இப்பிடியா 'காசுக்குப் பட்டம் தாறம்' எண்டு சொல்லுற தம்பி அணுகிற ஆக்களும் சும்மா லேசுப் பட்ட ஆக்கள் இல்லை. எல்லாரும் யாழ்ப்பாணத்தின்ர "பிக் சொட்ஸ்". "கல்விக்கு கண் திறந்தவர்" "இரக்கப்பட்ட இழிச்சவாயன்", "வர்த்தகப் பெருச்சாளி" எண்டு ஏற்கனவே கனக்கப் பட்டங்கள் வாங்கினவை. தங்கட காசை அள்ளிக்குடுத்து அள்ளிக் குடுத்து பட்டம் வாங்கினவை. பட்டம் குடுத்த நேரத்தில போர்த்திற பொன்னாடை கூட இவையின்ற காசில தான் அவையள் வாங்குவினம் எண்டாப் பாருங்கோவன்?*

*ஆசை ஆரைத் தான் விட்டது எண்டது போல எல்லாரும் பேருக்கு முன்னால க(ல்)லாநிதி எண்டு போடுறதுக்காக அள்ளி, அள்ளிக் குடுத்திருக்கினம்.*

*அந்த "மகிழ்ச்சியான ராசா" விடம் மாட்டுப்பட்டவையளில நான் மட்டும் தான் ஒண்டுமில்லாத ஒருத்தன். வெளிநாட்டில பிள்ளை இருக்கிறதால காசைப் பாராமல் பட்டத்தை வாங்குவன் எண்டு நினைக்கிறார் போல*

*அவர் வேலைக்கு வந்ததுக்குப் பட்டியல் அனுப்பின அரசியல் ஆள் தான் உந்தக் காசுக்குப் பட்டம் குடுக்கிற கம்பினியின் பிதாமகனாம். தன்ர "லிஸ்ற்"ல வேலைக்குப் போன அரசாங்க அலுவலக அல்லக்கைகள் கனபேருக்குக் க(ல்)லாநிதிப் பட்டம் வாங்கிக் குடுத்து அவையள வைச்சு யாவாரம் செய்யிறாராம் ஐயா!*

*எண்டாலும் ஐயான்ர காட்டில மழை தான் பாருங்கோ. போனவன், வந்தவன் எல்லாம் பட்டம் எடுக்க ஆசைப்பட, அவன்ர காசை வைச்சே அவனுக்கு விழா எடுக்கிற ஆக்கள எண்னெண்டு சொல்லுறது? "பங்கஷன்" நடத்திப் "பப்ளிசிற்றி" யும் ஆகுது - யாவாரத்துப் பங்கால காசும் வருகுது.!*

*"ஊரான் வீட்டு நெய்யே! என் பொண்டாட்டி கையே!"*

*-நரமுனி*

# ராஜீவ் காந்தி முதல் ராஜீவ் காந்தி வரை



(பாரதி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்கி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன் இன்று காலை சென்னையிலுள்ள ராஜீவ் காந்தி அரச மருத்துவமனையில் மரணமானார். இன்றிரவு இலங்கைக்குப் பயணமாக இருந்த நிலையிலேயே சாந்தனின் உயிர்காலையில் பிரிந்திருக்கின்றது.

சாந்தன் இலங்கை வருவதற்கான அனுமதியை இந்திய மத்திய அரசு கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியது. அதன் பின்னர் சில ஆவணங்கள் தேவையாக இருந்ததால் அவரது பயணயம் தாமதமாகியது.

சாந்தனை இலங்கைக்கு அழைத்துவருவதற்காக அவரது இளைய சகோதரரர் மதி சுதா ஒரு வாரத்துக்கு மேலாக சென்னையில் தங்கியிருந்தார். பெரும்பாலான நேரம் ராஜீவ் காந்தி மருத்துவமனையிலேயே தனது அண்ணாவுடன் இருந்துள்ளார்.

சகோதரன் நடக்க முடியாத - எழுந்திருக்கச் சிரமமப்படும்நிலையில் இருந்தமையால், அவருக்கு உதவியாக மதி சுதா இருந்துள்ளார். "நீ என்னுடனேயே இரு" என சாந்தன் சிறுபிள்ளைபோல மதிசுதாவை தன்னுடனேயே வைத்திருந்தமையையும் காணமுடிந்தது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முதலில் மரண தண்டனை பெற்று அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்ட பின்னர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தன், கடந்த 2022 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார். இது குடிவரவு குற்றங்களுடன் தொடர்புடைய வெளிநாட்டவர்களுக்கான முகாம். இது தனிமைப்படுத்தப்பட்ட ஒரு முகாம்.

கடந்த மாதம் அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப பட்டார். அதையடுத்து உயர் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், சாந்தனின் உடல் நிலை இரு தினங்களுக்கு முன்னர் மோசமடைந்தது.

"கல்லீரல் செயலிழப்பு காரணமாக அவருக்கு கல்லீரல் சிகிச்சை பிரிவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அந்த துறையின் தலைவரும், மருத்துவருமான பிரேம்குமார் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள் சிகிச்சை அளித்து வந்தனர். அவருக்கு கல்லீரல் செயலிழப்பு ஏற்படுவதற்கான காரணத்தை அறிந்து கொள்ள முயற்சித்தோம். அதன்காரணமாக பயாப்சி சோதனை மேற்கொள்ள முயன்றோம். அதற்கு அவர் மறுப்பு தெரிவித்தார்" என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக தெரிவித்த மருத்துமனை முதல்வர் மருத்துவர் தேரணி ராஜன், "கிரிப்டோஜெனிக் சிரோசிஸ் பாதிப்பு காரணமாக சில சமயங்களில் சுயநினைவு குன்றி, இயல்பு நிலைக்கு திரும்புவார். அதன் காரணமாக தீவிர கண்காணிப்பில் இருந்தார். அவருக்கு நேற்று இரவு உடல்நலத்தில் பின்னடைவு ஏற்பட்டது. சுயநினைவை இழந்தார். செயற்கை சுவாசம் பொருத்தி மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். இந்நிலையில், இன்று அதிகாலை அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. தொடர்ந்து சிபிஆர் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் சிகிச்சை பலன் அளிக்காமல் இன்று காலை உயிரிழந்தார்" என்று தெரிவித்தார்.

இன்றிரவு இலங்கைக்குப் புறப்பட தயாராக இருந்த நிலையில் அவரது உடல் நிலை மோசமடைந்தது. இன்று அதிகாலை அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அதிதீவிர சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் அவர் மரணமானார்.

ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அங்கிருந்து அவரை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் "எவராலும்" எடுக்கப்படாமையால்தான் தனது தாயாரை பார்க்க வேண்டும் என்ற 35 வருடகால கனவு நனவாகாமல் போய்விட்டது!

கனவு நனவாகிறது - என அவரது தாயார் நம்பிக்கொண்டிருந்த இறுதி வேளையில் இந்த அதிர்ச்சிச் செய்திதான் அவரையும் சென்றடைந்திருக்கின்றது.

தமிழ்த் தலைவர்கள் "முக்கியமான வேலைகளில்" பிஸியாக இருந்தமையால் இதனையிட்டு அக்கறைப்பட அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை! பாஸ்ப்போட் வழக்கில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஒருவரை விடுவிப்பதற்கு எவ்வாறு அணுகுமுறைகளை முன்னெடுக்க வேண்டும். அதனை எவ்வாறு கையாள வேண்டும் என்பது எமது தலைவர்களுக்குத் தெரியவில்லை.

வீராவேசமான அறிக்கைகளை பத்திரிகைகளுக்கு அனுப்பிவைப்பதன் மூலமாக மட்டும் இதனைச் சாதிக்க முடியாது. இராஜந்திர ரீதியாக- சட்டரீதியாக அணுக வேண்டிய பிரச்சினை இது. இந்தப் பிரச்சினையை கையாள முற்பட்டால், புதுடில்லி எவ்வாறு பார்க்கும் என்ற அச்சம் வேறு அவர்களுக்கு. தமது மக்களைவிட புதுடில்லிக்கு விசுவாசமாக இருப்பதுதான் அவர்களுக்குத் தேவையாக இருந்தது...

ஆனாலும், தமிழகத்தில் இருந்த ஒரு - இருவர் இறுதி நேரத்தில் முன்னெடுத்த ஆக்கபுர்வமான நடவடிக்கைகளால் சாந்தனுக்கு இலங்கை வர அனுமதி கிடைத்து. ஆனால்,...











(கடந்த வெள்ளிக்கிழமை தனது சகோதனை மருத்துவமனையில் சாந்தன் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படங்கள்)

# கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம சேவர் பிரிவின் அபிவிருத்தி குழு கூட்டம்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவின் நடப்பாண்டுக்கான கிராம அபிவிருத்தி குழுக் கூட்டம் குரக்கன் சேனை பொது மண்டபத்தில் நடைபெற்றது.

2024 ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின் அடிப்படையில் புத்தள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் செயற்திட்டங்கள் தொடர்பாக கூட்டத்தில் தெளிவு படுத்தப்பட்டதோடு, எதிர் வரும் காலங்களில் அமைச்சின் ஊடாக செயற்படுத்த உத்தேசித்திருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

அதேவேளையில் குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மாணவர் பாடசாலை கல்வியில் பின்னடைவில் உள்ளனர் என்றும், அவர்கள் கல்வியைத் தடை இன்றி கற்பதற்கான திட்டம் ஒன்றினை கிராம அபிவிருத்தி குழு ஊடாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன், எண் அறிவையும் எழுத்தறிவு யும் தரம் 1,2 மாணவர்களுக்கு சரியாக வழங்குவோமேயானால் மாணவர்களின் எதிர் காலம் கேள்விக்குறியாகாது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அபிவிருத்தி பராமரிப்பு உத்தியோகத்தர், கற்பிட்டி பிரதேச சபையின் முன்னால் உறுப்பினர் ஏ.ஆர் பௌசான், குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவின் மீனவ சங்கத் தலைவர்கள், மகளீர் சங்க தலைவி, முதியோர் சங்கத் தலைவர், சமூர்த்தி சங்கத் தலைவர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.









# களுவாஞ்சிக்குடியில் சர்வதேச தாய்மொழித் தினம்

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த சர்வதேச தாய்மொழி தின நிகழ்வானது பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நேற்று பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது .

தாய்மொழிக்காக போராடி உயிரிழந்தவர்களை நினைவுகூறி, உலகின் அனைத்து மக்களின் தாய்மொழி உரிமையை பாதுகாக்கும் வகையில் பெப்ரவரி 21ம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக ஐ.நாவின் யுனெஸ்கோ 1999ம் ஆண்டு பிரகடனப்படுத்தியது.

இதனையடுத்து 2000ம் ஆண்டிலிருந்து பெப்ரவரி 21ம் திகதி சர்வதேச தாய்மொழி தினமாக கொண்டாடப்படுகின்றது.

“நமது தாய்மொழியை நினைத்து நாம் பெருமிதம் அடையலாம். ஆனால் இன்னுமொருவருடைய மொழியை சிறுமைப்படுத்துவது மனித அறமாகாது” என்பது தாய்மொழிகள் தினம் சொல்லும் செய்தி. இதன்போது “நம் தாய்மொழியை பேணுதல் ஒரு பன்முக நோக்கு” எனும் தலைப்பின் கீழ் தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதி பதிவாளர் த. சஞ்சீவி சிவகுமாரினால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது.

பிரதேச கலைஞர்களின் பாடல்கள் மற்றும் கணேஷா கலைக்கழக மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் கதிரவன் பட்டிமன்ற பேரவை வழங்கிய 126வது சிறப்பு பட்டிமன்றம் “தற்காலத்தில் தமிழ்மொழி வளர்கிறது - தற்காலத்தில் தமிழ்மொழி தளர்கிறது” எனும் தலைப்பில் இடம்பெற்றமை விசேட அம்சமாகும். இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவல உத்தியோகத்தர்கள், பிரதேச மூத்த எழுத்தாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்

# காசநோய் பற்றி அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டும் செயலமர்வு சாய்ந்தமருதில்



(அஸ்ஹர் ஆதம்)

காசநோய் சம்பந்தமாக அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டும் செயலமர்வொன்று இன்று சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறையிலுள்ள கல்முனைப்பிராந்திய மார்பு நோய் சிகிச்சைப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதில் மாவட்ட காசநோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.அப்துல் கபூர் வளவாளராகக்கலந்து கொண்டார். இந்நிகழ்வில் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட் நிருவாக உத்தியோகத்தர் எம். என்.எம். றம்ஸான், திட்டமிடல் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம்.அஸ்ஹர், அபிவிருத்தி உதவியாளர் ஏ.பஷீர் உட்பட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





## கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி உ—த மாவணவர்களுக்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் விழிப்புணர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி உயர்தர மற்றும் மாணவர் தலைவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி அதிபர் எம்.ஐ ஜாபீர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன் போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள்,சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு அதிதியாக சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலீக் கலந்து கொண்டார்

இதில் பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளான இஷட்.எம் ஸாஜீத், எம்.எச்.எம் றிபாஜ் ஏ.பீ.எம் றிப்சாத், ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியார்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# கல்முனை மாநகர சபையில் Online Payment அங்குரார்ப்பணம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்கான கொடுப்பனவுகளை இணைய வழி ஒன்லைன் மூலம் செலுத்துவதற்கான Online Payment System நேற்று செவ்வாய்க்கிழமை (27) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அவர்கள் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.



கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற நிதி மோசடிகளைக் கருத்தில் கொண்டு, நிதிப் பிரிவை ஒழுங்குமுறைப்படுத்தி, மோசடிகளை முற்றாகத் தவிர்க்கும் வகையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண சபை என்பவற்றின் அங்கீகாரம் பெற்ற tak;g அபிவிருத்தி அதிகார சபையின் “CAT-20 Payment System” எனும் செயலியானது யூ.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் சில மாதங்களுக்கு முன்னர் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

ஒரே கூரையின் கீழ் சேவைகளை வழங்கும் Onestop Service - முகப்பு அலுவவலகத்தில் ஏற்படுத்தப்பட்ட மேற்படி முறைமையின் ஓர் அங்கமாகவே ஒன்லைன் மூலமாக கொடுப்பனவுகளை செலுத்தும் சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் பலர் நிகழ்வில் கலந்து கொண்டு குறித்த ஒன்லைன் மூலமான கொடுப்பனவு முறைமையை செயற்படுத்துவது தொடர்பிலான ஆலோசனை, வழிகாட்டல்களை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜெளஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், யுஎன்டிபி நிறுவனத்தின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளர் ஷாமில் சாலிஹ் உட்பட வயம்ப அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் மாநகர சபையின் பிரிவுத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் பங்கேறிருந்தனர்.

இந்த வழிமுறை மூலம் கல்முனை மாநகர சபைக்குரிய சோலை வரி உள்ளிட்ட சேவைக் கட்டணங்களை பொது மக்கள் மாநகர சபைக்கு வராமலேயே www.pay.cat2020.lk எனும் இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் ஒன்லைன் ஊடாக இலகுவாக செலுத்திக் கொள்ள முடியும்.

இது சம்மந்தமான மேலதிக விபரங்கள் தேவைபபடுவோர் முகப்பு அலுவலகத்தின் 0672059546 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்படுகிறது.






## தென்கிழக்கு பல்கலை ஊழியர்கள் போராட்டம் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பிதம்!

### சர்வதேச ஆய்வரங்கும் ஒத்திவைக்கப்பட்டது



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் சம்மேளனம், முன்னெடுத்துள்ள தொடர்ச்சியான இரு நாட்கள் கொண்ட அடையாள வேலை நிறுத்தத்தின் எதிரொலியாக இன்று தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் காரணமாக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன..

நிறைவேற்று உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் எம்.எச். நபார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜ/டீன் ஆகியோரது இணைந்த தலைமையில் இடம்பெற்ற குறித்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் பெருமளவான ஊழியர்கள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போராட்டத்தின் காரணமாக நாளை இடம்பெறவிருந்த 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு அடுத்த தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம். எம். முகமது காமில் வழிகாட்டலில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத கொடுப்பனவை வழங்கு!, என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வை தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்களின் இரண்டாம் நாள் போராட்டம் சம்மாந்துறையில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீடத்தில் நாளை (29) இடம்பெறவுள்ளது.

## கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்களும் ஆர்ப்பாட்டம்




(நூருல் /ஹுதா உமர்)

பல்கலைக்கழக ஊழியர்கள் எதிர்நோக்கும் சம்பளப் பிரச்சினை மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நீண்ட நாட்களாக தீர்க்கப்படாதுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் இன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு இணங்க, நாட்டில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இருநாள் (28,29) தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அமைவாக, மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் நிலைய முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி .28.2024 இல் வெளியிடப்பெற்றது.